Ours bank with
Bank of Baroda

மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 306 | உள்ளூர் - 04.11.2026 | புதன்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 306 | வெளியூர் - 05.11.2026 | வியாழக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

தீபாவளி! ஒரே நாளில் நரக சதுர்த்தசி, லட்சுமி பூஜை!

புதன்தோறும் கொட்டிக்கிடக்கும் வேலைகள்!

தீபாவளிக்கு இலவச வேட்டி, சேலை?

விரைவில் 5 தொகுதி தமிழக இடைத்தேர்தல்!

இந்தியாவில் மரபணு மாற்றப்பட்ட பொருட்கள் இறக்குமதிக்கு அனுமதியா? பியூஸ் கோயல்!

புதுடெல்லி, நவ. 04–

இந்தியாவில் மரபணு மாற்றப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதிப் பதில்லை என்றும் எதிர்காலத்திலும் இத்தகைய இறக்குமதிகளுக்கு அனுமதி வழங்கப்படாது எனவும் மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை மந்திரி பியூஸ் கோயல் உறுதியளித்தார். டெல்லியில் உள்ள தனியார் கல்லூரி மாணவர்களி டையே அவர் உரையாற்றினார்.

அப்போது அவர், இந்தியா இதுவரை எந்தவொரு மரபணுமாற்றப்பட்டபொருட்களையும் இறக்குமதி செய்ய அனுமதித்ததில்லை. இது மிகவும் உணர்வுப்பூர்வ மான விஷயம் என்பதால், எதிர்காலத்திலும் இத்தகைய பொருட்களை இறக்கு மதி செய்ய அனுமதி வழங்கப்படாது" என்றார்.



மேலும் அவர், "பால் பண்ணை துறை இந்தியாவிற்கு மிகவும் முக்கியமானது. எந்தவொரு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்திலும் இந்தத் துறைக்கு இந்தியா இது வரை வரிச் சலுகைகளை வழங்கியதில்லை.

வெளிநாடுகளில் பால் பொருட்கள் தயாரிக்கும்போது கன்றுக்குட்டி இறைச்சி அல்லது ரென்னெட் பயன்படுத்தப்படு கிறது. இந்தியாவின் மத உணர்வுகளைப் பாதிக்காத வகையில், இத்தகைய பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவது தடுக்கப்பட்டு, கடுமையான சான்றிதழ் நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

இதுவரை இறுதி செய்துள்ள வர்த்தக ஒப்பந்தங்களில், விவசாயிகள், மீனவர்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் நலன்களில் எந்தவித சமரச மும் செய்துகொள்ள வில்லை. ஜவுளி, மருந்து, விவசாயப் பொருட்கள் மற்றும் ஆபரணங்கள் போன்ற துறைகளில் இந்தியாவிற்கு முன்னுரிமை அடிப்படையி லான சந்தை வாய்ப்புகளைப் பெற அரசு தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது. தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்க நிறுவனங்கள் வழங்கும் புதிய வாய்ப்பு களை மாணவர்கள் தீவிரமாக பரிசீலிக்க வேண்டும்" என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் அதிகாரப் போட்டி தீவிரம்!

இரு அவைகளையும் கைப்பற்றிய ஜனநாயகக் கட்சி! விவேக் ராமசாமி தோல்வி; இந்தியர்கள் வெற்றி!

"அதிகாரம் என்னிடமே!" டிரம்ப் அதிரடி!

வாஷிங்டன், நவ. 04–

அமெரிக்க இடைக்காலத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பெரும்பான்மை பெற்றுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள், அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமையிலான குடியரசுக் கட்சிக்கு அரசியல் பின்னடைவாக அமைந்துள்ளன. குடியரசுக் கட்சியின் செல்வாக்குமிக்க டெக்சாஸ், கான்சஸ், ஒஹியோ உள்ளிட்ட மாகாணங்களில் ஜனநாயகக் கட்சி முக்கிய வெற்றி களைப் பெற்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒஹியோ ஆளுநர் தேர்தலில் டிரம்ப்பின் ஆதரவாளரான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விவேக் ராமசாமி, ஜனநாயகக் கட்சியின் ஏமி ஆக்னிடம் தோல்வியடைந்ததாகக் கூறப்படுகிறது.

அதேநேரத்தில், இந்திய வம்சாவளியினரான பிரமிளா ஜெயபால், சுஹாஸ் சுப்ரமணியம், அருணா மில்லர் மற்றும் பியா தண்டியா ஆகியோர் வெற்றி பெற்றுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

டிரம்ப் திட்டவட்டம்: தேர்தல் முடிவுகள் குறித்து கருத்து தெரிவித்த டிரம்ப், நாடாளுமன்ற இடைக்காலத் தேர்தலில் தாம் போட்டியிடவில்லை என்றும், போட்டியிட்டிருந்தால் குடியரசுக் கட்சி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றிருக்கும் என்றும் கூறியதாகத் தகவல்கள்



தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் பலம் அதிகரித்தாலும், அதிபரின் அரசியலமைப்புச் சட்ட அதிகாரங்கள் தொடரும். குறிப்பாக, சட்ட மசோதாக்கள் மீது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும். எனினும், அந்த வீட்டோவை நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை யுடன் நிராகரிக்கலாம்.

பெருநிறுவனங்களுக்கு புதிய சவால்: ஜனநாயகக் கட்சி பெரும்பான்மை பெற்றால், வங்கிகள், தனியார் முதலீட்டு நிறுவனங்கள், வரிச்சலுகைகள் மற்றும் பெருநிறுவனங்களின் செயல்பாடுகள் மீதான நாடாளுமன்றக் கண்காணிப்பு அதிகரிக்கக்கூடும்.

செயற்கை நுண்ணறிவால் ஏற்படும் வேலைவாய்ப்பு மாற்றங்கள், டேட்டா சென்டர்களின் மின்சாரத் தேவை, சுற்றுச்சூழல் பாதிப்புகள் உள்ளிட்ட விவகாரங்களும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படலாம்.

மெட்டா, கூகுள், ஓபன் ஏஐ, அமேசான், ஆப்பிள், டெஸ்லா, மைக்ரோசாஃப்ட் உள்ளிட்ட தொழில்நுட்ப நிறுவனங்களின் அரசுத் தொடர்புகள் மற்றும் சலுகைகள் குறித்தும் கேள்விகள் எழுப்பப்பட வாய்ப்புள்ளது. இருப்பினும், குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு எதிரான விசாரணைகள் அறிவிக்கப்பட்டதாக இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

ஆந்திரா உள்ளாட்சித் தேர்தல்; என்டிஏ அபாரம்!

அமராவதி, நவ. 04–

ஆந்திர பிரதேசத்தில் 13 மாநகராட்சிகள், 79 நகராட்சிகள் மற்றும் நகர பஞ்சாயத் துகள் என மொத்தம் 92 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடந்த 1–ந் தேதி தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி நேற்று பலத்த பாதுகாப்புடன் நடந்தது.

இதில் ஆந்திராவில் ஆளும் முதல்–மந்திரி சந்திரபாபுநாயுடு தலைமையிலான தெலுங்கு தேசம், பவன் கல்யாணின் ஜன சேனா மற்றும் பா.ஜனதா ஆகிய கட்சிகள் அடங்கிய தேசிய ஜனநாயகக்



கூட்டணி பெரும்பாலான இடங்களில் வெற்றியைப் பெற்றுள்ளது. மொத்தமுள்ள 13 மாநக ராட்சிகளிலும் தேசிய ஜனநாயக கூட்டணி முன்னிலை பெற்று பல இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

குறிப்பாக திருப்பதி, சித்தூர், குண்டூர், நெல்லூர், விசாகப்பட்டினம் ஆகிய முக்கிய மாநகராட்சிகளில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்கள் முன்னிலை பெற்றிருந்தனர். எதிர்க்கட்சியான ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி பெரும்பாலான இடங்களில் பின்னடைவைச் சந்தித்துள்ளது. இந்த வெற்றியை ஆந் திரா முழுவதும் உள்ள தேசிய ஜனநாயக கூட்டணி தொண்டர்கள் பட்டாசுகள் வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர். முரசு புயல், மழை காரண மாக சில இடங்களில் வாக்கு எண்ணிக்கையில் தாமதம் நிலவியது குறிப்பிடத்தக் கது.

அண்ணன் சீர் திட்டத்துக்கு தங்க நாணயம், பட்டுப்புடவை கொள்முதல் செய்ய ஏற்பாடு- தமிழக அரசு டெண்டர்!

சென்னை, நவ. 04–

அண்ணன் சீர் திட்டத்திற்கு தேவையான தங்க நாணயம் மற்றும் பட்டுப்புடவையை கொள்முதல் செய்ய சமூக நலத்துறை டெண்டர் கோரி உள்ளது.

தமிழகத்தில் திருமணமாகும் மணப்பெண்களுக்கு அண்ணன் சீராக 8 கிராம் (22 காரட்) தங்க நாணயமும், ஒரு பட்டு புடவையும் வழங்கும் அண்ணன் சீர் திட்டத்துக்கு ரூ.812 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தமிழக அரசு ஏற்கனவே ஆணை பிறப்பித்தது.

இதனைத் தொடர்ந்து இந்த திட்டத்திற்கு தேவையான தங்க



நாணயம் மற்றும் பட்டுப்புடவையை கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசின் சமூக நலத்துறை இப்போது டெண்டர் கோரி உள்ளது. ஒரு தங்க நாணயம் 8 கிராம் எடையுடன் 22 கேரட் 916 ஹால்மார்க் தரம் கொண்டதாக இருக்க வேண்டும்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டுப் புடவையை பொறுத்தவரையில் சில்க் மார்க் மற்றும் ஹேண்டலும் மார்க் இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

டெண்டர் நடைமுறைகள் முடிந்து டிசம்பர் இறுதிக்குள் இவற்றை கொள்முதல் செய்வதற்கான ஆணை வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. ஆண்டு வருமானம் ரூ.2.5 லட்சத்துக்குள் உள்ள மணப்பெண்களுக்கு இத்திட்டத்தின் கீழ் தங்க நாணயமும், பட்டுப்புடவையும் அண்ணன் சீராக வழங்கப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆன்லைன் -ல் பணம் இழந்தால் இழப்பீடு!

புதுடெல்லி, நவ. 04–

ஆன்லைன் பண மோசடிகளில் பாதிக்கப்படுவோருக்கு அதிகபட்சம் ரூ.25,000 இழப்பீடு வழங்கும் புதிய விதிமுறை 2027 ஜனவரி 1 முதல் அமலுக்கு வரவு ள்ளதாகத் தகவல் வெளியாகி யுள்ளது. ரிசர்வ் வங்கியின் புதிய திட்டத்தின்படி, ரூ.50,000–க்குள் மோசடி மூலம் பணத்தை இழந்தவர்களுக்கு, மீட்கப்படாத தொகையில் 85 சதவீதம் அல்லது அதிகபட்சம் ரூ.25,000 வரை இழப்பீடு வழங்கப்படும் எனக் கூறப்படுகிறது. இந்தச் சலுகையை ஒருவர் வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே பயன்படுத்த முடியும்.



ஏடிஎம், நெட் பேங்கிங், கிரெடிட் கார்டுமற்றும்பிஓஎஸ்பரிவர்த்தனைகளில் ஏற்படும் மோசடிகளுக்கும் இத்திட்டம் பொருந்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோசடி நடந்த 5 நாட்களுக்குள் வங்கியில் புகார் அளிக்க வேண்டும். மேலும், 1930 என்ற சைபர் குற்ற உதவி எண்ணிலோ, தேசிய சைபர் குற்ற இணையதளத்திலோ புகார் பதிவு செய்யலாம்.

மோசடிக்கு வாடிக்கை யாளரே காரணம் என்பதை நிரூபிக்கும் பொறுப்பு வங்கிகளுக்கு வழங்கப்படும் என்றும், இத்திட்டம் முதல்கட்டமாக ஓராண்டு செயல்படும் என்றும் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தீபாவளிக்கு இலவச வேட்டி, சேலை?

சென்னை, நவ. 04–

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தமிழகத்தில் முதியோர் உதவித்தொகை பெறும் ரேஷன் அட்டைதாரர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கப்படும் எனக் கூட்டுறவுத் துறை அறிவித்துள்ள தாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பொதுவாக பொங்கல் பண்டிகையின்போது ரேஷன் அட்டைதாரர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கப்படுகிறது. ஆனால் தீபாவளியை முன்னிட்டு முதியோர் ஓய்வூதியம் (OAP) பெறும் ரேஷன் அட்டைதாரர்களுக்கு மட்டுமே இந்தச் சலுகை வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் உள்ள ரேஷன் கடைகளில் நவம்பர் 3–ஆம் தேதி விநியோகம் தொடங்கியுள்ளதாகவும், நவம்பர் 7–ஆம் தேதி சனிக்கிழமை வரைவேட்டி,சேலைபெற்றுக்கொள்ளலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதற்காகத் தேவையான வேட்டி, சேலைகள் ஏற்கெனவே கொள்முதல் செய்யப்பட்டு, மாநிலம் முழுவதும் உள்ள ரேஷன் கடைகளுக்கு அனுப்பப்பட்டு ள்ளதாகக் கூட்டுறவுத் துறை தெரிவித்துள்ளது. தகுதியுள்ள முதியோர் தங்களது ரேஷன் அட்டையு டன் சம்பந்தப்பட்ட நியாயவிலைக்



கடைக்குச் செல்ல வேண்டும். அங்கு கைரேகை சரிபார்ப்புக்குப் பின்னர் இலவச வேட்டி, சேலை வழங்கப்படும்.

அனைத்து ரேஷன் அட்டைதாரர்களுக்கும் இந்தச் சலுகை பொருந்தாது. முதியோர் ஓய்வூதியம் பெறுவோர் மட்டுமே பயனடைய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடைசி நேரக் கூட்ட நெரிசலைத் தவிர்க்க முன்கூட்டியே பெற்றுக்கொள்ளுமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதற்கிடையில், தீபாவளிக்காக இலவச மளிகைப் பொருட்கள் தொகுப்பு வழங்கப்படும் எனப் பரவிய தகவலுக்கு தமிழக அரசு எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை.

முதலமைச்சர் விஜய் தலைமையிலான தவெக அரசு பொறுப்பேற்ற பின்னர், தீபாவளியை முன்னிட்டு முதல்முறையாக இலவச வேட்டி, சேலை வழங்கப்படுவதாகவும், அவற்றின் தரம் குறித்த எதிர்பார்ப்பு பயனாளர்களிடையே அதிகரித்துள்ளதாகவும் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தலையங்கம்

மதுரை மணி

புதன்கிழமை 04.11.2026

விசுவாவசு தமிழ் வருடம்

ஐப்பசி மாதம் 18-ம் தேதி

மலைகளை அழித்தால் மனிதர்கள் அழிவார்கள்!



இயற்கை எச்சரிக்கிறது! மனிதன் அலட்சியப்படுத்துகிறான்! அதன் விளைவாக மலைகள் சரிகின்றன; மனித உயிர்கள் பலியாகின்றன. தமிழகத்தின் மலைப்பகுதிகளில் தொடரும் நிலச்சரிவுகள் வெறும் இயற்கைப் பேரிடர்கள் மட்டுமல்ல; மனிதனின் பேராசைக்கும் நிர்வாகத்தின் அலட்சியத்திற்கும் விடுக்கப்படும் கடுமையான எச்சரிக்கைகளாகும்.

வடகிழக்குப் பருவமழையின் தீவிரத்தால் நீலகிரி, கொடைக்கானல் உள்ளிட்ட மலைப்பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. நீலகிரியில் 62 இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டதாகவும், குன்னூர் அருகே நிலச்சரிவில் சிக்கிய அரசுப் பேருந்து ஓட்டுநர் உயிரிழந்ததாகவும் வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

மலைகள் வெறும் சுற்றுலாத் தலங்களல்ல; அவை தமிழகத்தின் இயற்கைப் பாதுகாப்பு அரண்கள். ஆனால், சுற்றுலா வளர்ச்சி என்ற பெயரில் மலைகள் குடையப்படுகின்றன. ஆடம்பர விடுதிகளுக்காக மரங்கள் வெட்டப்படுகின்றன. சாலைகளுக்காக மலைச்சரிவுகள் சிதைக்கப்படுகின்றன. இயற்கையின் சமநிலையைச் சீர்குலைத்துவிட்டு, பேரிடர் ஏற்பட்ட பிறகு நிவாரணம் வழங்குவது மட்டுமே அரசின் கடமையாகிவிட முடியாது.

நீலகிரியில் நிலச்சரிவு அபாயமுள்ள பகுதிகள் ஏற்கெனவே கண்டறியப்பட்டிருந்தும், அங்கு கட்டுமானங்கள் தொடர்வதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். விதிமீறல்களுக்கு அதிகாரிகளோ அரசியல் செல்வாக்கோ துணைநின்றிருந்தால், பொறுப்பானவர்கள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பேரிடர் நிகழ்ந்த பிறகு இழப்பீடு வழங்குவதைவிட, பேரிடர் நிகழாமல் உயிர்களைக் காப்பதே சிறந்த நிர்வாகம்!

தமிழக அரசு உடனடியாக மலைப்பகுதிகளில் உள்ள ஆபத்தான கட்டுமானங்களை ஆய்வு செய்ய வேண்டும். நிலச்சரிவு அபாயப் பகுதிகளில் புதிய கட்டுமானங்களுக்குக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும். முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புகள், மழைநீர் வடிகால் வசதிகள், அவசரகால மீட்புத் திட்டங்கள் ஆகியவை முழுமையாகச் செயல்படுத்தப்பட வேண்டும்.

வளர்ச்சி என்பது கட்டடங்களின் உயரத்தில் இல்லை; மக்களின் உயிர்ப் பாதுகாப்பில்தான் இருக்கிறது என்பதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.

மலைகளைக் காப்பது இயற்கையைப் பாதுகாப்பது மட்டுமல்ல; நாளைய தலைமுறையின் உயிரைக் காப்பதுமாகும்!

ஆசிரியர்,

மதுரை மணி நாளிதழ்



திமுக திருப்பூர் வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் மாணவர் அணி துணை அமைப்பாளர் சுல்பிகர் அலி ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர் முன்னாள் மேயர் தினேஷ் குமார் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சந்திரகுமார் முன்னிலையில் தீபாவளி திருநாளை முன்னிட்டு மாணவரணி நிர்வாகிகளுக்கு புதிய ஆடை இனிப்புகள் வழங்கப்பட்டது

இந்த நிகழ்வில் பகுதி கழகச் செயலாளர் கொ ராமதாஸ். மின்னல் அ.நாகராஜ்.வெ. ஜோதி போலர் சம்பத். எம் எஸ் மணி. வார்டு செயலாளர் சண்முகசுந்தரம். மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அசோக் குமார். மாநகர மாணவரணி அமைப்பாளர் கவியரசு. மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் சந்துரு.15 வது வட்டக் கழக நிர்வாகி விஜய் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.



கரூர் மாவட்டத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள மாவட்ட ஆட்சியர் பிரசன்னா ராமசாமி அவர்களை முன்னாள் காங்கிரஸ் மாவட்ட தலைவரும் தேசிய கிசான் காங்கிரஸ் ஒருங்கிணைப்பாளருமான பேங்க் சுப்பிரமணியன் ஆர் டி ஐ மாநில பொதுச் செயலாளர் ஜி பி எம் மனோகரன் ஆர் பி ஜி மாவட்டத் தலைவர் போட்டோ பாலு மாவட்ட செயலாளர் சேகர் தாந்தோணி வட்டார செயலாளர் சந்தானம் மாணவர் காங்கிரஸ் மாவட்ட தலைவர் வழக்கறிஞர் சசிகுமார் ஆகியோர் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

அம்பாசமுத்திரம்: பொது வேட்பாளராக சீமான்?

சென்னை, நவ. 04–

அம்பாசமுத்திரம் தொகுதி இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பொது வேட்பாளர் ஆக வாய்ப்பிருக்கிறதா என்பது பேசுபொருளாகியுள்ளது.

அம்பாசமுத்திரம், விராலிமலை, திருச்சி கிழக்கு, கரூர், பெருந்துறை ஆகிய 5 தொகுதிகளுக்கான தேர்தல் வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளன. தீர்ப்பு விரைவில் வெளியாகக்கூடும் எனக் கருதப்படுவதால், இடைத்தேர்தலும் மிக விரைவில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், அம்பாசமுத்திரம் தொகுதியில் தான் போட்டியிடப் போவதாகவும், அனைத்து சமூகத்துக்கான பொது வேட்பாளர் 'நான்தான்' என்றும் சீமான் அறிவித்திருப்பது அரசியல் களத்தைச் சூடேற்றியுள்ளது. திராவிட கட்சிகளின் ஆதரவை நேரடியாகவோ மறைமுகமாகவோ பெற சீமான் தயாராக இருக்கிறார் என்பதாகவே அவரது அறிவிப்பை எடுத்துக்கொள்ள வேண்டும்.

திமுக தலைவர் ஸ்டாலினும், அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே. பழனிசாமியும் உடனடியாக சீமானின் அறிவிப்பை ஆதரித்தோ அல்லது எதிர்த்தோ கருத்து எதையும் தெரிவிக்கவில்லை. தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகு முடிவெடுக்கலாம் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

திமுக ஆதரிக்குமா?: தாராபுரம் தொகுதி நாதக வேட்பாளர் கார்த்திகாவை காவல் துறையினர் கைது செய்ததற்கு திமுக, அதிமுக, பாஜக, பாமக, தேமுதிக உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்தனர். அவர்களுக்கு நன்றி தெரிவித்து சீமானும் அறிக்கை வெளியிட்டார். அப்போது திமுகவை கடுமையாக விமர்சித்துவரும் நாதகவுக்கு ஆதரவாகவும், தவெகவை விமர்சித்தும் ஸ்டாலின் கண்டன அறிக்கை வெளியிட்டது பேசுபொருளானது. திமுக–நாதக கூட்டணி உருவாகிறதா என்ற கேள்வியும் எழுந்தது.

அம்பாசமுத்திரத்தில் சீமானை ஆதரித்து, திமுக போட்டியிலிருந்து விலகினால், கட்சி நிர்வாகிகளும் தொண்டர்களும் சோர்வடையக்கூடும் என்று ஒரு கருத்து நிலவுகிறது. மாறாக,



திமுக போட்டியிட்டு, அதிமுக சீமானை ஆதரித்துவிட்டால் மும்முனைப் போட்டி என்ற நிலை உருவாகிவிடும். அது திமுகவுக்கு ஒரு சவாலாக உருவெடுக்க வாய்ப்புள்ளது. பெரியார், கருணாநிதி ஆகியோரை கடும் விமர்சனம் செய்துவரும் சீமானை ஆதரித்தால் திமுகவின் அடிப்படை வாக்கு வங்கிக்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்ற தயக்கமும் திமுகவுக்கு இருக்கிறது.

2029 மக்களவைத் தேர்தலில் அதிமுக, பாஜக, பாமக, அமமுக ஆகியவற்றை உள்ளடக்கிய தேசிய ஜனநாயக கூட்டணியில் நாதகவும் சேரும்போது அது திமுகவின் தேர்தல் வாய்ப்புகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். இடைத்தேர்தல் மட்டுமன்றி, 2029 மக்களவைத் தேர்தலில் ஏற்படப்போகும் லாப, நஷ்டத்தை சேர்த்தே கணக்குபோட வேண்டிய கட்டாயம் திமுகவுக்கு இருக்கிறது.

2026 பேரவைத் தேர்தலில் திமுகவுடன் இருந்த கூட்டணிக் கட்சிகள் (தேமுதிகவை தவிர்த்து) இப்போது தவெக பக்கம் சென்றுவிட்டன. 2029–தேர்தலின்போது அவை மீண்டும் திமுக கூட்டணிக்கு வர வாய்ப்பிருக்கிறதா என்பது கேள்விக்குறிதான். அதேபோல, அதிமுக கூட்டணியில் உள்ள பாமக, அமமுக போன்ற கட்சிகளும் பாஜகவைவிட்டு விலகி திமுக கூட்டணிக்குச் செல்வதும் சந்தேகமே.

இந்நிலையில், 15 ஆண்டுகளாக தொடர்ந்து தனித்து நின்று ஒரே ஒரு வெற்றிக்காக காத்திருக்கும் சீமானை ஆதரித்தால், 2029 தேர்தலில் திமுக கூட்டணிக்கு நாதக வருவதற்கு வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுகிறது. இதுகுறித்து, கட்சியின் மூத்த நிர்வாகிகளுடன் திமுக தலைமை ஆலோசனை நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

அதிமுக ஏற்குமா?: அதிமுகவை பொருத்தவரை கடந்த பேரவைத் தேர்தலில் அதிமுக வென்ற தொகுதி என்பதால் அம்பாசமுத்திரத்தில் போட்டியிடுவதில் தவிர்க்க முடியாத சூழல் உருவாகியுள்ளது. அதேநேரத்தில், சீமானை திமுக ஆதரித்தால், அது அதிமுகவுக்கு ஒரு பெரும் சவாலாக உருவெடுக்கும் என அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர். மேலும், இந்தத் தொகுதியில் அதிமுகவின் செல்வாக்கு மிக்க நிர்வாகியாக இருந்த இசக்கி சுப்பையா தவெகவுக்கு சென்றுவிட்டது, அதிமுகவுக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

அம்பாசமுத்திரம் இடைத்தேர்தலைப் பொருத்தவரை சீமானுக்கு அளிக்கும் ஆதரவு 2029 மக்களவைத் தேர்தல் கூட்டணிக் கணக்கை நிர்ணயிக்கும் என்று கருதப்படுகிறது. அதேநேரத்தில், இரு கட்சிகளும் ஆதரித்து சீமான் வெற்றி பெற்றால், அவரது சட்டப்பேரவை பிரவேசம், இரு கட்சிகளுக்கும் புதிய சவாலாக உருவெடுக்கக்கூடும். இரு கட்சிகளின் ஆதரவு கிடைத்தும் சீமானால் வெற்றி பெற முடியாவிட்டால், தமிழகத்தின் மிகப்பெரிய சக்தி தவெக என்பதை உறுதிப்படுத்தியது போல் ஆகிவிடும்.

இத்தகைய சூழலில், வேட்பாளரை நிறுத்துவதா அல்லது பொது வேட்பாளராக சீமானை ஆதரிப்பதா என்ற மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த முடிவை எடுப்பது குறித்து இரு கட்சித் தலைவர்களும் மிகக் கவனமாக ஆய்வு செய்து வருகின்றனர். தேர்தல் தேதி அறிவிக்கப்படும்போதுதான் கட்சிகளின் நிலைப்பாடு என்ன என்பது அதிகாரபூர்வமாகத் தெரியவரும். சீமானைப் பொருத்தவரை நஷ்டப்பட ஏதுமில்லை. பொது வேட்பாளராக ஏற்றுக்கொள்ளப்பட்டால், அவரது செல்வாக்கு அதிகரிப்பதுடன், தமிழக அளவில் முதல்வர் விஜய், முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி, மு.க.ஸ்டாலின் அளவுக்கு இல்லாவிட்டாலும், உதயநிதி, வைகோ, திருமாவளவன், அன்புமணி போன்றவர்களுக்கு நிகரான தலைவராக அவர் உயரக்கூடும்.

பொது வேட்பாளராக சீமானை மற்ற கட்சிகள் ஏற்றுக்கொள்ளுமா என்பது இருக்கட்டும். உருமாறிவிட்ட அரசியல் சூழலில், தனித்துக் களமிறங்கினால் கடந்த முறை வாங்கிய வாக்குகளையேகூட அவரால் தக்கவைத்துக்கொள்ள முடியுமா என்பதே சந்தேகம்தான்.

டாஸ்மாக் பணியாளர்களுக்கு தீபாவளி போனஸ் வங்கிக் கணக்கில் வரவு!

சென்னை.நவ. 04–

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு டாஸ்மாக் பணியாளர்களுக்கு 20 சதவீத போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்படி, தகுதியுள்ள பணியாளர்களுக்கு அதிகபட்சமாக ரூ.16,800 அவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படவுள்ளது.

இதுகுறித்து டாஸ்மாக் நிறுவனம் வெளியிட்டுள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது: டாஸ்மாக் நிறுவனத்தில் பணிபுரியும் நிரந்தரப் பணியாளர்கள், அயல் பணிப் பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், விற்பனையாளர்கள், உதவி விற்பனையாளர்கள் ஆகியோருக்கு 2025 ஏப்ரல் முதல் 2026 மார்ச் வரையிலான ஓராண்டு காலத்துக்கான ஊதியத்தின் அடிப்படையில் போனஸ் கணக்கிடப்பட்டுள்ளது.

இதில் 8.33 சதவீதம் போனஸாகவும்,



11.67 சதவீதம் கருணைத் தொகையாகவும் என மொத்தம் 20 சதவீதம் வழங்கப்படும். போனஸ் கணக்கீட்டுக்கான மாத ஊதிய உச்சவரம்பு ரூ.7,000–ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஓராண்டுக்கான அதிகபட்ச கணக்கீட்டு ஊதியம் ரூ.84,000 ஆகும். இதன் அடிப்படையில் அதிகபட்சமாக ரூ.16,800 வழங்கப்படும்.

போனஸ் வழங்குவதற்குத் தேவையான நிதி புதன்கிழமை (நவ. 4) மாவட்ட மேலாளர்களின் செயல்பாட்டுக் கணக்குகளுக்கு மின்னணுப் பரிவர்த்தனை மூலம் அனுப்பி வைக்கப்படும். நிதி கிடைத்தவுடன் எவ்விதத் தாமதமுமின்றி பணியாளர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக போனஸ் மற்றும் கருணைத் தொகையை வரவு வைத்து உரிய ரசீதுகளைப் பெற வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட்ட நிதியில் மீதமுள்ள தொகையை இதர செலவினங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதேவேளையில், ஒதுக்கப்பட்ட நிதி போதவில்லை என்றால், மாவட்ட மேலாளர் அல்லது கிடங்கின் செயல்பாட்டுக் கணக்கில் உள்ள நிதியிலிருந்து பற்றாக்குறையை ஈடுசெய்து போனஸ் வழங்க வேண்டும் என அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ரூ.30 கோடி பேரம்? - தவெக எம்.எல்.ஏ. முஸ்தபா!

மதுரை, நவ. 04–

மதுரை விமான நிலையத்தில் தவெக எம்.எல்.ஏ. முஸ்தபா செய்தி யாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது, திமுகவும், அதிமுகவும் இணைந்து தற்போது ஒருவேலை பார்த்துக்கொண்டிரு க்கிறது. தவெக வெற்றிபெறாது என திமுகவும், அதிமுகவும் நினைத்தது. ஆனால், தவெக வெற்றிபெற்று நல்லாட்சி தருவதை இந்த ஆட்சியை கெடுக்க திமுகவும், அதிமுகவும் முயற்சிக்கிறது.

திமுகவும், அதிமுகவும் மீண்டும் சட்டமன்ற உறுப்பினர்களை வாங்க குதிரை பேரத்தில் ஈடுபடுகின்றன. குதிரை பேரத்தில் ஈடுபட எனக்கே செல்போன் அழைப்பு வந்துள்ளது. என்னையே தொடர்புகொண்டு நீங்கள் முதலில் 15 கோடி ரூபாய் வாங்கிக்கொள்ளுங்கள், நாங்கள் (திமுக, அதிமுக) சட்டமன்றத்தில் தவெக அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவருவோம். அப்போது நீங்கள்




தவெக அரசுக்கு எதிராக வாக்களித்து பின்னர் 15 கோடி ரூபாய் வாங்கிக்கொள்ளுங்கள் என மொத்தம் ரூ. 30 கோடி பேரம் பேசினர். இது குறித்து தலைமையிடம் நான் கூறியுள்ளேன்.

திமுக, அதிமுகவால் மக்கள் மன்றத்தில் வெற்றிபெற முடியவில்லை. ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கவிழ்க்க முயல்கின்றனர். இந்த பேரத்தில் அதிமுகவினர் ஈடுபடுகின்றனர். மதுரையை சேர்ந்த அதிமுக மூத்த நிர்வாகி என்னை தொடர்புகொண்டார். தவெக ஆட்சியை கெடுப்பதற்கு எம்.எல்.ஏ.க்களிடம் குதிரை பேரத்தில் ஈடுபடுகின்றனர்.

தவெக எம்.எல்.ஏ.க்கள் ரூ. 100 கோடி கொடுத்தாலும் வரமாட்டார்கள். இந்த குதிரைபேர கூட்டுச்சதியில் திமுக, அதிமுக சேர்ந்துதான் ஈடுபட்டுள்ளன. இன்னும் ஓரிரு நாட்களில் இதை யார் செய்தார்கள் என்று வெளிவரும். அதை மக்கள் பார்த்துக்கொள்வார்கள்.

35 கட்சிகள் கூட்டணியுடன் திமுக தேர்தலை சந்தித்தது. அதிமுகவுடன் கூட்டணிக்கு யாரும் வரவில்லை. யாருடனும் கூட்டணி வைக்காமல் தவெக 35 சதவீத வாக்குகளை பெற்று வரலாறு படைத்து ஆட்சியை பிடித்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார். திமுகவும், அதிமுகவும் இணைந்து குதிரை பேரத்தில் ஈடுபடுவதாக தவெக எம்.எல்.ஏ. முஸ்தபா குற்றஞ்சாட்டியுள்ள சம்பவம் தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



தீபாவளி! ஒரே நாளில் நரக சதுர்த்தசி, லட்சுமி பூஜை!



நாடு முழுவதும் மக்களால் உற்சாகமாகக் கொண்டாடப்படும் தீபாவளி பண்டிகை, இந்த ஆண்டு நவம்பர் 8–ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை வருகிறது. நரக சதுர்த்தசியும் அமாவாசை லட்சுமி பூஜையும் ஒரே நாளில் அமைவது இந்த ஆண்டின் சிறப்பம்சமாகக் கருதப்படுகிறது.

இந்து சந்திர நாட்காட்டியில் இடம்பெற்றுள்ள அதிக மாதம் காரணமாக, கடந்த ஆண்டைவிட 19 நாட்கள் தாமதமாக தீபாவளி வருகிறது. வழக்கமாக அக்டோபர் மாதத்தில் கொண்டாடப்படும் இப்பண்டிகை, இந்த ஆண்டு நவம்பர் இரண்டாவது வாரத்தில் கொண்டாடப்படுகிறது.

நரகாசுரனை ஸ்ரீகிருஷ்ணர் வதம் செய்ததை நினைவுகூரும் வகையில் நரக சதுர்த்தசி கொண்டாடப்படுகிறது. தமிழகத்தில் தீபாவளியன்று அதிகாலையில் எண்ணெய் தேய்த்துக் குளித்து, புத்தாடைகள் அணிந்து, கோயில்களுக்குச் சென்று வழிபடுவது பாரம்பரிய வழக்கமாக உள்ளது.

வடமாநிலங்களில் அமாவாசை இரவில் செல்வத்துக்கும் வளத்துக்கும் அதிபதியான மகாலட்சுமி தேவிக்கும் விநாயகருக்கும் சிறப்பு பூஜைகள் நடத்தப்படுகின்றன. வீடுகள் அகல் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, குடும்ப நலன் மற்றும் செல்வவளம் பெருக வேண்டி வழிபாடுகள் நடைபெறுகின்றன.


டெல்லியில் லட்சுமி பூஜைக்கான உகந்த நேரம் மாலை 5.55 மணி முதல் இரவு 7.50 மணி வரை எனப் பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், சூரிய அஸ்தமன நேரத்தைப் பொறுத்து ஒவ்வொரு நகரத்திலும் பூஜை முகூர்த்தம் மாறுபடும்.

ஐந்து நாள் தீபாவளி கொண்டாட்டம் நவம்பர் 6–ஆம் தேதி தனத்திரயோதசியுடன் தொடங்குகிறது. நவம்பர் 8–ல் தீபாவளி, நவம்பர் 10–ல் கோவர்த்தன பூஜை, நவம்பர் 11–ல் சகோதர பாசத்தைப் போற்றும் பாய் தூஜ் பண்டிகை கொண்டாடப்படுகின்றன.

தனத்திரயோதசி நாளில் தங்கம், வெள்ளி மற்றும் புதிய பாத்திரங்கள் வாங்குவது மங்களகரமானதாக நம்பப்படுகிறது. கோவர்த்தன பூஜையன்று கிருஷ்ணருக்குச் சிறப்பு வழிபாடுகளும் உணவுப் படையல்களும் நடத்தப்படுகின்றன.

சினிமா துளிகள்..!

ரஜினியின் "தர்மன்" படத்தில் இணைந்த நடிகை ஸ்ரீலீலா!



நடிகர் ரஜினிகாந்த் தற்போது தனது 173–வது திரைப்படமான 'தர்மன்' படத்தில் நடித்து வருகிறார். 'ஒ மை கடவுளே', 'டிராகன்' ஆகிய படங்களை இயக்கிய அஸ்வத் மாரிமுத்து இப்படத்தை இயக்கி வருகிறார். கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனம் இப்படத்தை தயாரிக்கிறது. ஆக்ஷன் கதைக்களத்தில் உருவாகும் இப்படத்தில் ரஜினிகாந்த் மருத்துவர் கதாபாத்திரத்தில் நடித்து வருவதாகக் கூறப்படுகிறது. சிம்ரன், ராஷி கன்னா, யோகி பாபு உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். அனிருத் இசையமைக்கிறார். நிகேத் பொம்மி ஒளிப்பதிவு செய்ய, பிரதீப் ஈ. ராகவ் படத்தொகுப்புப் பணிகளை மேற்கொள்கிறார். மேலும், பிரபல தெலுங்கு நடிகர் ராம் பொதினேனி இப்படத்தில் ரஜினிகாந்துக்கு வில்லனாக நடிக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

'தர்மன்' திரைப்படத்தின் படப்பிடிப்பு பல்வேறு கட்டங்களாக நடைபெற்று வருகிறது. சமீபத்தில் 3–ம் கட்ட படப்பிடிப்பு நிறைவடைந்ததாக இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து புகைப்படங்களைப் பகிர்ந்து அறிவித்திருந்தார். தற்போது மைசூரு உள்ளிட்ட பகுதிகளில் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது. இப்படத்தை 2027–ம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு திரைக்கு கொண்டுவர படக்குழு திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில், சமீபத்தில் இப்படத்தில் நடிகை நயன்தாரா இணைந்துள்ளதாகப் படக்குழு ஏற்கனவே கிளிம்ப்ஸ் வீடியோ வெளியிட்டு அறிவித்திருந்தது. அவர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளார்.

இந்த நிலையில், தற்போது மற்றொரு பிரபல நடிகையான ஸ்ரீலீலாவும் 'தர்மன்' படத்தில் இணைந்துள்ளார். இதனை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ள படக்குழு, ஸ்ரீலீலாவின் அறிமுக வீடியோவையும் வெளியிட்டுள்ளது. ஸ்ரீலீலாவின் கதாபாத்திரம் படத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ரஜினிகாந்த், நயன்தாரா, ஸ்ரீலீலா என நட்சத்திரப் பட்டாளம் இணைந்துள்ளதால் 'தர்மன்' திரைப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.



உழைக்கும் பெண்களுக்கான 10 ஆரோக்கியக் குறிப்புகள்!

வீட்டிலும் வெளியிலும் ஓய்வின்றி உழைக்கும் பெண்களே... உங்கள் உடல்நலத்திலும் அக்கறை செலுத்துங்கள்!

வீட்டு வேலைகள், அலுவலகப் பணிகள், விவசாயம், வியாபாரம் எனப் பல்வேறு பொறுப்புகளைச் சுமக்கும் பெண்கள் தங்களது உடல்நலத்தைப் பாதுகாப்பது மிகவும் அவசியம்.

1. காலை உணவைத் தவிர்க்காதீர்கள்: இட்லி, தோசை, முட்டை, பருப்பு, காய்கறிகள் போன்ற சத்தான உணவுகளைச் சாப்பிடுங்கள்.

2. போதுமான தண்ணீர் குடியுங்கள்: வெயிலில் வேலை செய்யும் பெண்கள் அடிக்கடி தண்ணீர் குடித்து நீர்ச்சத்து குறைவதைத் தவிர்க்க வேண்டும்.

3. முதுகு, கழுத்து வலியைத் தவிர்க்கவும்: நீண்ட நேரம் ஒரே நிலையில் அமர்வதையோ நிற்பதையோ தவிர்த்து, இடையிடையே உடலை அசைத்து ஓய்வெடுங்கள்.

4. இரும்புச்சத்து அவசியம்: கீரைகள், பருப்பு வகைகள், பயறு, இறைச்சி போன்ற உணவுகளைச் சேர்த்துக்கொள்ளுங்கள். அதிக சோர்வு இருந்தால் ரத்தசோகை பரிசோதனை செய்துகொள்ளுங்கள்.

5. வெயிலில் பாதுகாப்பு: வெளிப்புற வேலைகளின்போது தொப்பி, குடை பயன்படுத்துங்கள். அதிக வெப்பம் நிலவும் நேரங்களில் கடினமான வேலைகளைக் குறைத்துக்கொள்ளுங்கள்.

6. தினமும் உடற்பயிற்சி: நடைப்பயிற்சி, யோகா அல்லது எளிய உடற்பயிற்சிகளை உடல்நிலைக்கு ஏற்ப மேற்கொள்ளுங்கள்.

7. தூக்கம் முக்கியம்: பெரியவர்கள் தினமும் குறைந்தது 7 மணி நேரம் தூங்க முயற்சிக்க வேண்டும்.

8. மன அழுத்தத்தைக் குறையுங்கள்: வேலைகளுக்கு இடையே சிறிய ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள். குடும்பத்தினருடன் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.

9. மாதவிடாய் ஆரோக்கியம்: அதிக ரத்தப்போக்கு, கடுமையான வலி அல்லது ஒழுங்கற்ற மாதவிடாய் இருந்தால் மருத்துவரை அணுகுங்கள்.

10. மருத்துவப் பரிசோதனை: வயது மற்றும் உடல்நிலைக்கு ஏற்ப ரத்த அழுத்தம், சர்க்கரை அளவு, கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் உள்ளிட்ட பரிசோதனைகளை மருத்துவரின் ஆலோசனையுடன் மேற்கொள்ளுங்கள்.

நினைவில் கொள்ளுங்கள்: குடும்பத்தைக் கவனிக்கும் பெண்கள் தங்களையும் கவனித்துக்கொள்வது அவசியம். ஆரோக்கியமான பெண்ணே ஆரோக்கியமான குடும்பத்தின் அடித்தளம்!

மதுரை மணி / மகளிர் நலம்

தீபாவளிக்கு தமிழக அரசு அதிரடி! ரூ.100-க்கு 10 வகை காய்கறிகள்!



சென்னை, நவ. 04–

தீபாவளியை முன்னிட்டு தமிழக அரசு 'வெற்றி சிறப்பு காய்கறித் தொகுப்பு' திட்டத்தை அறிவித்துள்ளது.

வெங்காயம், தக்காளி, உருளைக்கிழங்கு, கேரட், பீன்ஸ், தேங்காய் உள்ளிட்ட 10 வகை காய்கறிகள் ரூ.100–க்கு வழங்கப்படு கின்றன. நவம்பர் 5 முதல் 7 வரை கூட்டுறவுத் துறையின் 218 விற்பனை நிலையங்களிலும், சென்னையில் 4 நடமாடும் கடைகளிலும் விற்பனை நடைபெறும். நிர்ணயிக்கப்பட்ட ரூ.100 விலையை மாற்றி வசூலிக்கக் கூடாது என அரசு உத்தரவிட்டுள்ளது.

தீபாவளிக்கு பட்டாசு வெடிக்கலாமா? கூடாதா?



சென்னை, நவ. 04–

தீபாவளியன்று காலை 6 முதல் 7 மணி வரையும், இரவு 7 முதல் 8 மணி வரையும் மட்டுமே பட்டாசு வெடிக்க வேண்டும் என தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது. உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி இந்தக் கட்டுப்பாடு அமல்படுத்தப்படுகிறது. குறைந்த ஒலி, காற்று மாசு ஏற்படுத்தும் பசுமைப் பட்டாசுகளைப் பயன்படுத்தவும், அதிக ஒலி எழுப்பும் சரவெடிகளைத் தவிர்க்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மருத்துவமனைகள், வழிபாட்டுத் தலங்கள், குடிசைப் பகுதிகள் அருகே பட்டாசு வெடிப்பதைத் தவிர்க்க வேண்டும் என தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் வலியுறுத்தியுள்ளது.





மருத்துவம், மருத்துவக்கல்வி மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.K.G.அருண்ராஜ் திருப்பூர் மாநகராட்சி, பூலுவப்பட்டி மாநகராட்சி துவக்கப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டங்களை திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.முத்துக்குமரன், சட்டமன்ற உறுப்பினர் (திருப்பூர் வடக்கு) திருமதி வி.சத்தியபாமா, துணை மேயர் திரு.ரா.பாலசுப்பிரமணியம், மாநகராட்சி ஆணையர் திரு.எம்.பி.அமித் இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ஆனந்தி, திருப்பூர் மாநகராட்சி 2–மண்டலத்தலைவர் திரு.கோவிந்தராஜ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

விருப்பாச்சி அரசினர் தொழிற்பயிற்சி மையத்தில் சட்ட விழிப்புணர்வு முகாம்!

ஒட்டன்சத்திரம், நவ. 04–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், விருப்பாட்சி கிராமத்தில் அமைந்துள்ள அரசினர் தொழிற்பயிற்சி மையத்தில், ஒட்டன்சத்திரம் வட்ட சட்டப்பணிகள் குழு சார்பில் சட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இந்த முகாமிற்கு தொழிற்பயிற்சி மையத்தின் முதல்வர் தீனதயாளன் தலைமை தாங்கினார். வழக்கறிஞர் என். பழனிச்சாமி சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு சட்டங்கள் குறித்து விரிவான விளக்கங்களை வழங்கினார். குறிப்பாக, குழந்தைகளை பாலியல் குற்றங்களில் இருந்து பாதுகாக்கும் சட்டங்கள் மற்றும் அதற்கான தண்டனைகள், புகையிலை மற்றும் போதைப் பொருட்கள் ஒழிப்பு, குழந்தைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பிற்காக செயல்படுத்தப்படும் அவசர உதவி எண்கள் குறித்து தெளிவாக எடுத்துரைத்தார்.

மேலும், தகவல் அறியும் உரிமைச் சட்டம், கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுக்கும் சட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு சட்டங்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் பயிற்சி அலுவலர் ரமாதேவி, வழக்கறிஞர் கார்த்திக் ஸ்ரீராம், சட்ட உதவி மைய தன்னார்வலர் காளியாதேவி மற்றும் அரசினர் தொழிற்பயிற்சி மைய மாணவ, மாணவிகள் திரளாகக் கலந்து கொண்டனர்.

சட்டங்கள் குறித்த விழிப்புணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்தும் வகையில் இம்முகாம் பயனுள்ளதாக அமைந்தது.

பழனி முருகன் மலைக்கோவிலில் ரோப் கார் சேவை தொடங்கியது!

பழனி நவம்பர் 04–

பழனி முருகன் மலைக் கோவிலில் தொழில் நுட்பக் கோளாறு காரணமாக நிறுத்தப்பட்ட ரோப் கார் சரி செய்யப்பட்டு இன்று முதல் தொடங்கியது. பழனியில் முருகன் மலைக் கோவிலில் பக்தர்கள் சாமி தரிசனம் செய்துவர வசதியாக ரோப் கார் உள்ளது. இந்த ரோப் கார் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு திடீரென தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு நிறுத்தப்பட்டது. அதன் பின்பு பராமரிப்பு பணிகள் நடைபெற்றது. குறிப்பாக கியர் பாக்ஸில் ஏற்பட்ட பழுதுகள் நீக்கப்பட்டது. புதிய உதிரி பாகங்கள் பொருத்தப்பட்டு நேற்று ரோப் கார் சோதனை ஓட்டம் நடைபெற்றது. அதன் பின்பு இன்ஜினியர்கள்



ரோப் காரை ஆய்வு செய்து இயக்கம் மற்றும் பாதுகாப்பு உறுதி செய்தனர். இன்று நவம்பர் 4 ந்தேதி காலையில் ரோப் கார் சேவை சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு தொடங்கியது. இதில் கோவில் நிர்வாக அதிகாரி பொறுப்பு வெங்கடேசன் பங்கேற்றார்.

பழனி முருகன் கோவில் ரோப் கார் சேவை மீண்டும் தொடக்கம் பக்தர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

மதுரை மத்திய சிறையில் போலீஸ்காரரை தாக்கிய கைதி!



மதுரை, நவ. 04–

மதுரை மத்திய சிறையில் போலீஸ்காரரை கைதி ஒருவர் தாக்கியதில் அந்த போலீஸ்காரர் நிலைதடுமாறி கீழே விழுந்தார். திருட்டு வழக்கில் தொடர்புடைய வாலிபர் ஒருவர் மதுரை சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். நேற்று அவரது நடவடிக்கையில் சந்தேகம் ஏற்பட்டதை தொடர்ந்து, அங்குள்ள போலீஸ்காரர் அவரிடம் விசாரித்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அந்த கைதி, போலீஸ்காரரை முகத்தில் தாக்கியதில் அவர் நிலைத்தடுமாறி கீழே விழுந்து காயமடைந்தார். இதனை தொடர்ந்து சிறையில் உள்ள ஆஸ்பத்திரியில் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்போது அவருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த சம்பவம் தொடர்பாக போலீசில் புகார் எதுவும் தெரிவிக்க வில்லை எனவும் போலீசார் தெரிவித்தனர்.



பழனியில் மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு பேட்டரி கார் மற்றும் ஊன்றுகோல் ஆகியவற்றை, திண்டுக்கல் சச்சிதானந்தம் எம். பி வழங்கினார். இதில் சரவண பொய்கை கந்த விலாஸ் அதிபர் என். பாஸ்கர் மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் மாவட்ட தலைவர் பகத்சிங் வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபு பாண்டியன் பங்கேற்றனர்.



கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கடவூர் தெற்கு ஒன்றியம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் கடவூர் ஒன்றிய பெருந்தலைவருமான கடவூர் அரண்மனை ஜமீன்தார் KKG முத்தையா அவர்களின் மனைவியும் தற்போதைய ஜமீன்தார் KKGMமோகன் தாயாரமான ராணி யார் ருக்மணி தேவி அவர்களின் மறைவை ஒட்டி அவரின் பூத உடலுக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கரூர் மாவட்ட கழகச் செயலாளர் K. கமலக்கண்ணன் அவர்கள் கழகத்தின் நிர்வாகிகளுடன் சென்று மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். உடன் கழகத்தின் மருத்துவ அணி இணைச் செயலாளர் Dr. திவ்யா, மாவட்ட கழக துணைச் செயலாளர் அரவை முத்து, கடவூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் VPM. பழனிசாமி, கடவூர் மத்திய ஒன்றிய கழகச் செயலாளர் பிச்சை, கடவூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் s. கைலாசம், மற்றும் கழகத்தின் ஒன்றிய கழக கிளைக் கழக சார்பு அணியை சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.முத்துக்குமரன் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ரா.ஆனந்தி அவர்கள் உள்ளார்.

பழனியில் களமிறங்கிய எஸ்.பி.ஜெயக்குமார் ஐ.பி.எஸ்.

பழனி நவம்பர் 04–

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பழனியில் திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் ஐபிஎஸ் அவர்கள் இரண்டு மணி நேரம் நேரடியாக நடை ரோந்து (FOOT PATROL) பணியில் ஈடுபட்டார்.

பழனி அடிவாரம் கிரிவீதியில் தொடங்கிய ரோந்து பணி, சன்னதி ரோடு வழியாக பழனி பேருந்து நிலையம் சென்றடைந்தது. அங்கு பொதுமக்கள் மற்றும் பயணிகளிடம் நேரடியாகக் குறைகளைக் கேட்டறிந்தார்.

தொடர்ந்து மயில் ரவுண்டானா, ஆர் எப் ரோடு உள்ளிட்ட பகுதிகளில் ரோந்து மேற்கொண்டு, பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்தார்.

பொதுமக்கள் தெரிவித்த குறைகளுக்கு உரிய நடவடிக்கை



எடுக்கப்படும் என உறுதியளித்ததுடன், ரயில்வே பீடர் சாலை உள்ளிட்ட முக்கியப் பகுதிகளில் காவல்துறையினரின் ரோந்து பணிகள் தொடர்ந்து உறுதிப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும், பாதுகாப்பில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் உடனடியாக அருகிலுள்ள காவல்துறையினரிடம் தகவல் தெரிவிக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தினார்.

மக்களின் பாதுகாப்பிற்காக அதிகாரி நேரடியாகக் களத்தில் இறங்கி ஆய்வு மேற்கொண்ட இந்த நடவடிக்கை பொதுமக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது.

தங்கம் விலை தொடர்ந்து உயர்வு!



சென்னை, நவ. 04–

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று (நவ. 4) சவரனுக்கு ரூ. 200 அதிகரித்து ஒரு சவரன் ரூ. 1,02,600–க்கும் கிராமுக்கு ரூ. 25 உயர்ந்து ஒரு கிராம் ரூ. 12,825–க்கும் விற்பனையாகிறது.

வெள்ளி விலை மூன்றாவது நாளாக மாற்றமின்றி ஒரு கிராம் ரூ. 200–க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ. 2 லட்சத்துக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

வேலை வாய்ப்பு

தமிழ்நாடு மின்வாரியத்தில் 500 பயிற்சிப் பணியிடங்கள்!

தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தில் (TNPDCL) பொறியியல் டிப்ளமோ முடித்தவர்களுக்கு 500 தொழில்நுட்பப் பயிற்சிப் பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஓராண்டு பயிற்சி வழங்கப்படும். தகுதியுள்ளவர்கள் நவம்பர் 28–க்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

விவரங்களுக்கு: https://nats.education.gov.in/

புதுக்கோட்டை அரசு ஐ.டி.ஐ.யில் வேலைவாய்ப்பு!

புதுக்கோட்டை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 2 அலுவலக உதவியாளர் பணியிடங்கள் நிரந்தர அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன. அக்டோபர் 26 முதல் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. தகுதியுள்ளவர்கள் நவம்பர் 17–க்குள் ஆஃப்லைனில் விண்ணப்பிக்கலாம்.

விவரங்களுக்கு: https://pudukkottai.nic.in/

ஈரோடு மாவட்ட சுகாதாரத் துறையில் 78 பணியிடங்கள்!

ஈரோடு மாவட்ட நலவாழ்வு சங்கத்தில் சுகாதார ஆய்வாளர், மருத்துவ அலுவலர், ஆய்வக நுட்புநர், தரவு பதிவாளர், ஓட்டுநர், மருந்தாளுநர் உள்ளிட்ட

78 பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன. தகுதியுள்ளவர்கள் நவம்பர் 12–க்குள் ஆஃப்லைனில் விண்ணப்பிக்கலாம்.

விவரங்களுக்கு: https://erode.nic.in/

பாரதியார் பல்கலைக்கழகத்தில் 5 பணியிடங்கள்!

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் இயக்குநர், கூடுதல் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், டீன், என்.எஸ்.எஸ். திட்ட ஒருங்கிணைப்பாளர், மக்கள் தொடர்பு அலுவலர் உள்ளிட்ட 5 நிரந்தரப் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. தகுதியுள்ளவர்கள் நவம்பர் 30–க்குள் நேரடி முறையில் விண்ணப்பிக்கலாம்.

தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்தில் 6 பணியிடங்கள்!

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத்தில் உதவி போக்குவரத்து மேலாளர், கணக்கு அதிகாரி, உதவிப் பொறியாளர் (மின்சாரம்), இந்தி மொழிபெயர்ப்பாளர் உள்ளிட்ட 6 நிரந்தரப் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. தகுதியுள்ளவர்கள் ஆன்லைனில் நவம்பர் 14 இரவு 11.59 மணிக்குள் விண்ணப்பிக்கலாம்.

விவரங்களுக்கு: www.vocport.gov.in

மத்திய உணவு ஆராய்ச்சி நிறுவனத்தில் 28 பணியிடங்கள்!

மைசூருவில் உள்ள மத்திய உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனத்தில் (CFTRI) 28 டெக்னீசியன் பணியிடங்கள் நிரந்தர அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன. அக்டோபர் 19 முதல் ஆன்லைனில் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. தகுதியுள்ளவர்கள் நவம்பர் 18–க்குள் விண்ணப்பிக்கலாம்.

விவரங்களுக்கு: https://cftri.res.in/

ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தில் 3,047 காலியிடங்கள்!

மத்திய அரசின் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகத்தில் (ONGC) 3,047 தொழிற்பழகுநர் பயிற்சிப் பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தியா முழுவதும் ஓராண்டு பயிற்சி வழங்கப்பட உள்ளது. அக்டோபர் 29 முதல் ஆன்லைனில் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. விண்ணப்பிக்க கடைசி நாள் நவம்பர் 20.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



இன்றைய கார்ட்டூன்



காமராஜர் காலை உணவுத் திட்டத்திற்கு ரவை, சேமியா கொள்முதல்: டெண்டர் அறிவிப்பு!

சென்னை, நவ. 04–

தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் மூலம் 34 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பயனடைந்து வருகின்றனர்.



அவர்களுக்கு உணவு வழங்குவதற்காக தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் மூலம் 3 வகையான உணவுப் பொருட்களை கொள்முதல் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. அதற்கான ஒப்பந்தப்புள்ளி (டெண்டர்) கோரப்பட்டுள்ளது. அதில், பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்திற்கு 1,300 மெட்ரிக் டன் டபுள் ரோஸ்ட் ரவை (1 கிலோ பாக்கெட்), 1,200 டன் சம்பா ரவை (1 கிலோ பாக்கெட்), 1,300 டன் சேமியா (200 கிராம் பாக்கெட்) ஆகியவை கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

வரும் ஜனவரி 1–ந் தேதியில் இருந்து 3 மாதங்களுக்கு இந்த உணவுப் பொருட்கள் தேவையாக உள்ளன. இந்த பொருட்களை வழங்க அகில இந்திய அளவில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது. நேற்று (2–ந் தேதி) காலையில் இருந்து இதற்கான ஒப்பந்தப்புள்ளி படிவம் பதிவிறக்கத்திற்கு தயாராக உள்ளது. வரும் டிசம்பர் 2–ந் தேதிவரை ஒப்பந்தபடிவத்தை சமர்ப்பிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

தமிழகத்துக்கு வரவேண்டிய முதலீடுகள் ஆந்திராவுக்கு சென்றதா? - தமிழக அரசு விளக்கம்!

சென்னை, நவ. 04–

தமிழ்நாடுக்கு வரவேண்டிய முதலீடுகள் ஆந்திராவுக்கு சென்றதாக தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் குற்றம் சாட்டியிருந்தனர். இதற்கு விளக்கம் அளித்து தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூக வலைத்தள கணக்கான தகவல் நம்பகத் தன்மை பிரிவு வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டு உள்ளதாவது:–



'ஹூன்டாய்' நிறுவனத்தின் உதிரிபாகங்கள் மற்றும் வாகன உற்பத்தி சார்ந்த சப்ளையர் நிறுவனங்களில் பெரும்பாலானவை கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. குறிப்பாக, தமிழ்நாட்டில் 'சியோன் இ–ஹவா' மற்றும் 'வாஷின்' போன்ற கொரிய நிறுவனங்கள், தமிழ்நாட்டில் அமைந்துள்ள ஹூன்டாய் நிறுவனத்திற்கு சப்ளை செய்து வருகின்றன. ஆந்திராவில் 'கியா' நிறுவனம் அமைக்கப்பட்டதை தொடர்ந்து, 'சியோன் இ–ஹவா' நிறுவனம் 2017–ம் ஆண்டிலேயே ஆந்திராவிலுள்ள அனந்தபூரில் தனது உற்பத்தி மையத்தைத் தொடங்கியது. தற்போது 'கியா' நிறுவனத்தின் ஆலை விரிவாக்கத்தை கருத்தில் கொண்டு சில 'சப்ளையர் நிறுவனங்கள், ஆந்திராவில் தங்களது உற்பத்தியை விரிவுபடுத்தி வருகின்றன.

ஏற்கனவே தமிழ்நாட்டில் அமைந்துள்ள 'ஹூன்டாய்' நிறுவனத்தின் சப்ளையர்கள், தொடர்ந்து தமிழ்நாட்டிலேயே முதலீடுகளை விரிவுபடுத்தி வருகின்றனர். அதுமட்டுமின்றி, மேலும் தமிழ்நாட்டில் அமைந்துள்ள 'ஹூன்டாய்' நிறுவனத்தின் சப்ளையர் நிறுவனங்கள் மின்சார வாகனங்களுக்கான உதிரிபாகங்கள் மற்றும் உயர்தர வாகன மின்னணுவியல் உற்பத்தியிலும் தங்களை விரிவுப்படுத்தி வருகின்றன.

இத்தகைய முதலீடுகள் மூலம் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியும், வேலைவாய்ப்பும் அதிகளவில் உருவாக்கப்பட்டு வருகின்றன. மேலும், இந்த நிறுவனங்கள் மின்சார வாகனங்கள் உதிரிபாக உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி, மேம்பாட்டு மையங்களை தமிழ்நாட்டில் அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

இதற்கு உதாரணமாக, மற்றொரு கொரிய நிறுவனமான 'இன்சி கன்ட்ரோல்ஸ்', தனது புதிய ஆராய்ச்சி மற்றும் மேம் பாட்டு மையத்தை புனேவில் அமைப்பதற்கு பதிலாக சென் னையை தேர்வு செய்துள்ளது. அடுத்தகட்டமாக 'ஹூன்டாய்' நிறுவனம் மற்றும் அதன் சப்ளையர் நிறுவனங்களுக்கான முதலீடு திட்டங்களை அறிவதற்கும், தேவையான உதவிகளை புரிவதற்கும், விரைவில் ஆலோசனை கூட்டம் நடைபெறவுள்ளது. இதற்கான முன்னெடுப்புகளை தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

கூடுதல் விலைக்கு மின்கொள்முதல்: தவெக அரசுக்கு மு.க.ஸ்டாலின் கேள்வி!

சென்னை, நவ. 04–

திமுக தலைவரும் முன்னாள் முதல் அமைச்சருமான மு.க. ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: கேரளத்தைப் பற்றிய இந்தச் செய்தியில் நமக்கொரு பாடம் இருக்கிறது. த.வெ.க. ஆட்சியில் ஒரு யூனிட் மின்சாரத்தை 35 ரூபாய், 37 ரூபாய், 41.50 ரூபாய் கொடுத்து வாங்குவது பற்றி மின்துறை அமைச்சர் பேசிக்கொண்டிருக்கும் இதே காலத்தில் கேரள அரசு ஒரு யூனிட்டை 14.50, 12.50 ரூபாய்க்கு வாங்கியிருப்பதே அதிக விலை என சர்ச்சையாகியுள்ளது.



அதைவிடவும் முக்கியமானது, ஒரு தனியார் நிறுவனம் தினமும் 500 மெகாவாட் மின்சாரத்தை ஒரு யூனிட் 8.645 ரூபாய்க்கு வழங்குவதற்கு கேரள அரசை அணுகியும், அதைப் புறக்கணித்த சர்ச்சையில் கேரள மின்வாரியத் தலைவர் அப்பொறுப்பிலிருந்தேநீக்கப்பட்டுள்ளார். நமக்கென்ன கேள்வியென்றால், 8.645 / 12.50/ 14.50 ரூபாய்களில் கேரளாவுக்கு மின்சாரம் கிடைக்குமென்றால் த.வெ.க. அரசுக்கு ஏன் அது சாத்தியமில்லாமல் போனது?இதில் எவ்வளவு பெரிய ஊழல் நடந்துள்ளது, யார் யார் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என விசாரிக்க வேண்டும். மின்துறை அமைச்சரின் கட்டுப்பாட்டில்தான் DVAC அமைப்பும் இருப்பதால் அவர்கள் இதை விசாரித்தால் உண்மை வெளிவராது. சுதந்திரமான, வெளிப்படைத்தன்மை கொண்ட ஆணையம் விசாரிக்க வேண்டும்" என்று பதிவிட்டுள்ளார்.

தமிழகம் முழுவதும் 10 ஆயிரம் பட்டாசு கடைகளுக்கு அனுமதி!

சென்னை, நவ. 04–

தீபாவளி பண்டிகையையொட்டி தமிழ்நாடு முழுவதும் தற்காலிக பட்டாசு கடைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படுவது வழக்கம். இதற்கு தீயணைப்பு, உள்ளாட்சி நிர்வாகம், காவல்துறை ஆகியோரிடம் இருந்து தடையில்லா சான்றிதழ் பெறுவது கட்டாயம். இதில் தீயணைப்பு துறையின் சான்றிதழ் கிடைத்த பின்னரே பிற துறைகளிடம் இருந்து சான்றிதழ் பெற முடியும்.



அந்தவகையில் நடப்பாண்டில் தீபாவளி பண்டிகைக்கு பட்டாசு கடை வைப்பதற்கு தடையில்லா சான்றிதழ் கோரி தீயணைப்பு துறைக்கு தமிழ்நாடு முழுவதும் இதுவரை 12,098 விண்ணப்பங்கள் வந்துள்ளன. இதில், 10 ஆயிரத்து 244 விண்ணப்பங்களுக்கு தீயணைப்புத்துறை தடையில்லா சான்றிதழ் வழங்கி இருப்பதாக அத்துறையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் அந்த அதிகாரி கூறும்போது, 'தற்போது வரை கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களில் 940 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. 914 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன.

விரைவில் 5 தொகுதி தமிழக இடைத்தேர்தல்!

சென்னை, நவ. 04–

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்று தவெக ஆட்சி அமைத்தது. ஆனால் ஆட்சிக்கு போதிய எம்.எல்.ஏ.க்கள் இல்லாத நிலையில், அதிமுக கட்சியில் இருந்து வெற்றிபெற்ற 25 எம்.எல்.ஏ.க்கள், அக்கட்சி தலைமையின் உத்தரவையும் மீறி, த.வெ.க. ஆட்சிக்கு ஆதரவு அளித்தனர்.

இதனால் அ.தி.மு.க. கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டது. அக்கட்சி யின் எம்.எல்.ஏ.க்கள் சிலர் ராஜினாமா செய்து த.வெ.க. கட்சியில் இணைந்தனர். இதனால் 7 தொகுதிகள் காலியாகின. அதில் மதுராந்தகம், தாராபுரம் ஆகிய 2 தொகுதிகளுக்கு சமீபத்தில் இடைத்தேர்தல் நடைபெற்றது.

அ.தி.மு.க.வின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்த மரகதம் குமரவேலும், சத்தியபாமாவும் அதே தொகுதிகளில் முறையே, மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதியில் த.வெ.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றனர்.

அடுத்ததாக காலியாக உள்ள புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை, கரூர், நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம், ஈரோடு மாவட்டம் பெருந்துறை, முதல்–அமைச்சர் விஜய் ராஜினாமா செய்த திருச்சி கிழக்கு ஆகிய 5 தொகுதிகள் தொடர்பான வழக்கில், சென்னை ஐகோர்ட்டு தீர்ப்பை தள்ளிவைத்துள்ளது.



இந்த வழக்கில் தீர்ப்பு விரைவில் எதிர்பார்க்கப்படுவதை அடுத்து, 5 தொகுதிகளிலும் இடைத்தேர்தலை நடத்த தேர்தல் கமிஷன் தயாராகி வருகிறது. தற்போது வாக்காளர் பட்டியல் சுருக்கமுறை திருத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவை டிசம்பர் மாதம் முடிவடைந்து, ஜனவரி முதல் வாரத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது. இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டால், இதில் சில மாற்றங்கள் இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

தற்போது வாக்குச்சாவடிக்கான புதிய பட்டியலை தேர்தல் கமிஷன் வெளியிட்டுள்ளது. 56 வாக்குச்சாவடிகள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன. அதோடு, வாக்குப்பதிவு எந்திரங்களை தயார் செய்வது உள்ளிட்ட பணிகள் குறித்து அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகளுடன் தேர்தல் கமிஷன் ஆலோசனை மேற்கொண்டு வருகிறது.

மேலும், அனைத்து அரசியல் கட்சிகளும் இடைத்தேர்தலுக்கு தங்களை தயார்ப்படுத்தி வருகின்றன. திருச்சி கிழக்கு தொகுதி (முதல்–அமைச்சர் விஜய் ராஜினாமா செய்த தொகுதி) தவிர மற்ற தொகுதிகளுக்கு. அ.தி.மு.க.வில் இருந்து த.வெ.க.விற்கு சென்ற சி.விஜயபாஸ்கர் (விராலிமலை), எம்.ஆர்.விஜயபாஸ்கர் (கரூர்), அம்பாசமுத்திரம் (இசக்கி சுப்பையா), ஜெயக்குமார் (பெருந்துறை) ஆகிய 4 பேருக்கும் மீண்டும் வாய்ப்பு கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

அவர்களை எதிர்த்து போட்டியிடும் மற்ற கட்சியினர் யார்–யார்? என்பது குறித்த பேச்சுகள் பரபரப்பாகியுள்ளன. இதனால் தமிழக அரசியல் களம் சூடுபிடித்துள்ளது.

லடாக்கில் சோனம் வாங்சுக் பள்ளிக்குத் தடை செயல்பாடுகளை உடனடியாக நிறுத்த நீதிமன்றம் உத்தரவு!

பிரபல கண்டுபிடிப்பாளரும், சுற்றுச்சூழல் ஆர்வலருமான சோனம் வாங்சுக் நிறுவிய 'இமாலயன் ஆல்டர்நேட்டிவ்ஸ் கல்வி நிறுவனம்' நடத்தி வரும் 'டெசர்ட் பிளவர்' பள்ளியின் அனைத்து செயல்பாடுகளையும் உடனடியாக நிறுத்துமாறு லடாக் நிர்வாகம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஜம்மு–காஷ்மீர் மற்றும் லடாக் உயர்நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளதால், இறுதித் தீர்ப்பு வரும் வரை இந்தத் தடை நீடிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லடாக்கின் ஃபியாங் பகுதியில் அமைந்துள்ள இந்த டெசர்ட் பிளவர் பள்ளி, அரசு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து முறையான ஒப்புதல், அனுமதிகள் அல்லது சான்றிதழ்களைப் பெறாமல் வகுப்புகள் மற்றும் இதர செயல்பாடுகளைத் தொடங்கியதாகக் கூறி, லே பகுதி



வட்டாட்சியர் அலுவலகம் நவம்பர் 1 ஆம் தேதி இந்த நோட்டீஸை அனுப்பியுள்ளது.

இந்த நோட்டீஸ், சோனம் வாங்சுக்கின் மனைவியும், இக்கல்வி நிறுவனத்தின் இணை நிறுவனருமான கீதாஞ்சலி ஜே. ஆங்மோவிடம் நேரடியாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த அதிரடி நடவடிக்கைக்கான முக்கியக் காரணம், கல்வி நிறுவனத்திற்கு லடாக் நிர்வாகத்தால் முன்பு ஒதுக்கப்பட்ட சுமார் 134.5 ஏக்கர் நில ஒதுக்கீட்டை அரசு ரத்து செய்ததுதான்.

இந்த நில ரத்து நடவடிக்கைக்கு எதிராக இக்கல்வி நிறுவனம் நீதிமன்றத்தை நாடியுள்ளது. இந்த வழக்கு தற்போது ஜம்மு–காஷ்மீர் மற்றும் லடாக் உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

நீதிமன்ற விசாரணை நிலுவையில் உள்ளதைக் சுட்டிக்காட்டியுள்ள லே வட்டாட்சியர், நீதிமன்றத்தின் இறுதி உத்தரவு வரும் வரை பள்ளியின் செயல்பாடுகள் குறித்து எந்தவொரு அடுத்தகட்ட நடவடிக்கையையும் எடுக்கக் கூடாது என்றும், தற்போதைய நிலையையே தீவிரமாகப் பின்பற்ற வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார். நீதிமன்ற உத்தரவை மீறினால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் மற்றும் கல்வித்துறையில் உலகளவில் புகழ்பெற்ற சோனம் வாங்சுக்கின் கல்வி நிறுவனத்திற்கு எதிராக லடாக் நிர்வாகம் எடுத்துள்ள இந்த அதிரடி நடவடிக்கை, அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் தங்கத்தின் தேவை 29 சதவீதம் சரிவு!

புதுடெல்லி, நவ. 04–

இந்தியாவைப் போன்ற வளரும் நாடுகளில், குறிப்பாக நடுத்தரக் குடும்பங்களுக்கு, தங்கம் என்பது வெறும் ஆடம்பர ஆப ணம் மட்டுமல்ல; அது ஒரு மிகச்சிறந்த முதலீடு மற்றும் நிதிப்பாதுகாப்பு அரண் ஆகும்.

பணவீக்கம் மற்றும் பொருளாதாரச் சவால்களுக்கு மத்தியிலும் எப்போதும் உயர்ந்து வந்த தங்கத்தின் தேவை, தற்போது உலகளாவிய விலையேற்றத்தின் எதிரொலியாக உள்நாட்டிலும் அதிரடியாகச் சரிந்துள்ளது. நடப்பு ஆண்டின் 3–வது காலாண்டில் (ஜூலை–செப்) உலக அளவில் தங்கத்தின் தேவை 1 சதவீதம் குறைந்து 1,369 டன்னாக உள்ளது என்று உலக தங்க கவுன்சில் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக தங்கத்தின் மதிப்பு 22 சதவீதம் அதிகரித்து 188 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. அதிக விலை காரணமாக நகைக்கான தேவை 17



சதவீதம் சரிந்து 313 டன்னாகக் குறைந்துள்ளது. இது 2020–ம் ஆண்டின் மூன்றாவது காலாண்டை விடக்குறைவான அளவாகும். இந்தியா மற்றும் சீனாவில் தங்கத்தின் தேவை முறையே 29 சதவீதம் மற்றும் 22 சதவீதம் சரிந்துள்ளது.

குறிப்பாக உள்நாட்டில் கடந்த ஆண்டின் 228.2 டன்களில் இருந்து தங்கத்தின் தேவை 162.5 டன்களாகக் குறைந்துள் ளது. இது குறித்து உலக தங்க கவுன்சிலின் இந்திய பிராந்திய தலைமை நிர்வாக அதிகாரி சச்சின் ஜெயின் கூறுகையில், சீனா மற்றும் இந்தியாவில் பருவகால மாற்றங்களால் தேவை சற்று மீண்டுள்ளது. இருப்பினும், சில்லறை முதலீட்டாளர்கள் விலை குறித்த தெளிவின்மையால் தயக்கம் காட்டி வருகின்றனர், என்று தெரிவித்தார்.

உலக அளவிலான மத்திய வங்கிகள் 321 டன் தங்கத்தை கையிருப்பில் சேர்த்துள்ளன. இது கடந்த ஆண்டை விட 42 சதவீதம் அதிகமாகும். தங்கத்தில் முதலீடு செய்யும் இடிஎப் நிதியங்கள் 211 டன் தங்கத்தை ஈர்த்துள்ளன. தங்கக்கட்டி மற்றும் தங்க நாணய தேவை 19 சதவீதம் சரிந்து 268 டன்னாக உள்ளது.

தொழில்நுட்பத் துறையில் தங்கத்தின் தேவை 3 சதவீதம் அதிகரித்து 85 டன்னாக உயர்ந்துள்ளது. மொத்த தங்க வினியோகம் 1 சதவீதம் குறைந்து 1,369 டன்னாக உள்ளது. சுரங்க உற்பத்தி 3 சதவீதம் அதிகரித்து 1,071 டன்னாக உயர்ந்துள்ளது. விலை குறித்த நிச்சயமற்ற தன்மையே இந்த சரிவுக்கு முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது.

வல்லரசு பார்வர்டு பிளாக் ஜெயந்தி விழா பொதுக்கூட்டம்!

மதுரை, நவ. 04–

அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் நிறுவனத் தலைவர் பி.என். அம்மாவாசித்தேவர் தலைமையிலும், மாநில பொதுச் செயலாளர் பா. சந்திரசேகரன் முன்னிலையிலும் தேவர் 119வது ஜெயந்தி விழா, நலத்திட்டம் வழங்கும் விழா தேவர் திருமகனார் விருது வழங்கும் பொதுக்கூட்டம் மதுரை, மேலமாசிவீதி – தெற்குமாசிவீதி சந்திப்பு, டி.எம்.கோர்ட் அருகே வல்லரசு திடலில் நடைபெற்றது. தேவர் திருமகனார் விருதை மாண்புமிகு முன்னாள் அமைச்சர் பொன்முத்துராமலிங்கம் வழங்கினார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டெல்லி சிறப்பு பிரதிநிதி கம்பம் பெ.செல்வேந்திரன் அவர்கள்



பெற்றுக்கொண்டார். அண்ணா திராவிட மக்கள் முன்னேற்றக் கழக நிறுவனத் தலைவர் வழக்கறிஞர் பசும்பொன் பாண்டியன் தொடக்க உரை நிகழ்த்தினார். இந்திய தேசிய லீக் மாநில தலைவர் எம். பஷீர் அகமது, மதுரை மாவட்ட தலைவர் சித்திக், ஷேக் அப்துல்லா. புரட்சிக் கவிஞர் மன்ற தலைவர் பி.வரதராஜன், தி.மு.க. சென்பகசுந்தரம், அண்ணா திராவிட மக்கள் முன்னேற்றக் கழக நிர்வாகிகள் பேச்சிமுத்து, சசிக்கு மார் மற்றும் பலர் கலந்து கொண்டனர். பார்வர்டு பிளாக் க. ஜெயக்குமார் நன்றி கூறினார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020